# நாமக்கல் - டிரினிடி மகளிர் கல்லூரியில் போலியோ விழிப்புணர்வு நிகழ்வு

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்க அமைப்பின் சார்பில் போலியோ விழிப்புணர்வ நிகழ்வு 12.12.2022 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் இயற்பியல் துறையின் உதவிப் பேராசிரியை ஆர். சகுந்தலாதேவி ‘இளம்பிள்ளை வாதம் - அறிகுறிகள், தடுத்தல் மற்றும் அதற்குண்டான சிகிச்சை” என்ற தலைப்பில் பேசினார்.

போலியோ வைரஸ் என்னும் இளம்பிள்ளை வாதம் நம் உடலின் தொண்டை, குடல் பகுதியில் தங்கியிருக்கும் ஒரு தீய கிருமி ஆகும். இக்கிருமியானது சளி. வாந்தி, எச்சில், மலம் மூலமாக மற்றவர்களுக்கு காற்றில் பரவி தொற்று நோயாக உருவெடுக்கிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பக்கவாதம் ஏற்பட்டு உடல் உறுப்புகள் செயலிழந்து விடுகிறது. போலியோ வைரஸை முழுமையாக ஒழிக்க முடியாது. இருப்பினும் போலியோ சொட்டு மருந்தினை 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு செலுத்துவதன் மூலம் போலியோ வராமல் தடுக்க முடியும். மேலும், உலக சுகாதார அமைப்பானது இந்தியாவை போலியோ இல்லாத நாடாக அறிவித்துள்ளது. போலியோ இல்லாத இந்தியா என்று நாம் பெருமையுடன் சொல்லிக் கொள்ள போலியோ சொட்டு மருந்துகளே முக்கிய காரணம் என்று அவர் இந்நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்.

இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் செஞ்சிலுவை சங்க ஒருங்கிணைப்பாளர் ஆர். சாவித்திரி மற்றும் துணை ஒருங்கிணைப்பாளர் வீ. கலைவாணி ஆகியோர் செய்திருந்தனர். ஏறத்தாழ 100 மாணவியர் இந்நிகழ்வில் பங்கேற்று பலன் பெற்றனர்.

Principal,
Trinity College for Women (Arts & Science),
Namakkal - 637 002.